# தமிழ் உள்ள வரை - தலைவா! உன் புகழ் நிலைத்திருக்கும்!!!



இன்று ஜூன் 3 - 5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராய், 80 ஆண்டுகால பொதுவாழ்வுக்கு சொந்தக்காரராய் விளங்கிய கலைஞர் அவர்களின் பிறந்தநாள்.

எந்த இளைஞரையும் ஆச்சரியப்பட வைத்தவர் உழைப்பு என்ற சொல்லுக்கு உருவம் கொடுத்துப் பார்த்தால் அவரது தோற்றம்தான் தெரி கிறது. எத்தனை கணிப்புகள், எத்தனை எதிர்ப்புகள்... எல்லாவற்றையும் தூள் தூளாக்கி வெற்றிச் சிகரத்தை எட்டிப் பிடிக்க முடிகிறது அவரால். தமிழ்நாடு அரசியல் அவரால் சுழற்றப்படுகிறது. அல்லது அவரைச் சுழல்கிறது. 80ஆண்டு பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரரான அவர்தான் 60 ஆண்டுகால அரசியலின் அச்சாணியாக இருக்கிறார். தமிழக அரசியலில் மட்டுமல்ல, இந்திய அரசியலையும் நிர்ணயிக்கும் சக்தியாகப் பலமுறை தன்னைப் வெளிப்படுத்தியவர் அவர்.

சளைக்காத சாதனைக்கு சொந்தக்காரர்தான் தமிழகத்தில் முதல்வராக ஐந்து முறை பொறுப்பு வகித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அரசியல் இலக்கியம் நாடகம் திரைப்படம் என அவர் தொட்ட துறைகளில் எல்லாம் வெற்றிக் கொடி நாட்டியவர். “உடன்பிறப்பே’ எனும் ஒற்றைச்சொல் மந்திரத்தில் ஒட்டுமொத்தத் தமிழகத்தையும் கட்டிப்போடும் ஆற்றல் அவரது பேச்சுக்கு உண்டென்பதைத் தமிழகம் அறியும். பாரதிக்குப் பிறகு தனக்கென ஒரு தமிழ்நடையை உருவாக்கிக் கடைநிலைத் தமிழனின் காதுகளிலும் கருத்தினிலும் தமிழைக்கொண்டு போய்ச் சேர்த்தவர் கலைஞர். பிரம்மாண்டமான ஆற்றலுக்கும் பிரமிக்க வைக்கும் சாதனைகளுக்கும் சொந்தக்காரர்

- சட்டமன்றம்: 1957 முதல் 2018 வரை 13 முறை சட்டமன்ற உறுப்பினர். போட்டியிட்ட அனைத்து தேர்தலிலும் வெற்றி. தோல்வியே காணாத சாதனை.

- முதலமைச்சர்: 5 முறை - 1969-71, 1971-76, 1989-91, 1996-2001, 2006-2011. மொத்தம் 6,863 நாட்கள் - கிட்டத்தட்ட 19 ஆண்டுகள்.

- எதிர்க்கட்சித் தலைவர்: 4 முறை - 1977, 1980, 2001, 2011.

- கட்சித் தலைவர்: 50 ஆண்டுகள் - 1969 முதல் 2018 வரை கழகத் தலைவர்.

* சமூக நீதி - இடஒதுக்கீடு புரட்சி:

**எம்.பி.சி இடஒதுக்கீடு:**

1969ஆம் ஆண்டு பிப்ரவரியில் தமிழக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றார். அவர் பதவி வகித்த காலத்தில் தந்தை பெரியார் 1973 திசம்பர் வரை என்னென்ன கோரிக்கைகளை முன்வைத்தாரோ, அவற்றை முழு மனதோடு ஏற்று நிறைவேற்றினார்.

எடுத்துகாட்டாக, இடஒதுக்கீடு கொள்கை. தமிழக முதலமைச்சராகத் திகழ்ந்த கு.காமராசர் எல்லா மதங்களையும் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோருக்கு 25 விழுக்காடும், பட்டியல் வகுப்பினருக்கு 16 விழுக்காடும் ஆக 41 விழுக்காடு மட்டுமே வழங்கினார்; மு. பக்தவத்சலம் காலத்திலும் 41 விழுக்காடு இடஒதுக்கீடே தொடர்ந்தது.

இடையில், உச்சநீதிமன்றம் கர்நாடக அரசு 50 விழுக்காட்டுக்குமேல் தந்த இடஒதுக்கீடு செல்லாது என்றும், இடஒதுக்கீடு பெறும் மூன்று வகுப்பாருக்கும் சேர்த்து, 50 விழுக்காட்டுக்குக் குறைவாகவே தரப்பட வேண்டும் என்றும் 1962இல் தீர்ப்பு அளித்தது.

தந்தை பெரியார் அதைச் சுட்டிக்காட்டி, தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோருக்குத் தரப்படும் இடஒதுக்கீட்டில் 8 விழுக்காடு மேலும் கூட்டி, அதைப் பிற்பட்டோருக்கு வழங்கலாமே எனக் கோரினார்.

அதை அப்படியே ஏற்றுக்கொண்ட கலைஞர், 1969 நவம்பரிலேயே, ஏ.என். சட்டநாதன் தலைமையில் மூவர் கொண்ட குழுவை அமைத்தார். அக்குழுவும் 8 விழுக்காடு சேர்த்திடப் பரிந்துரைத்தது.

இடையில் தமிழகப் பட்டியல் வகுப்பினர் மக்கள் தொகையில் 16 விழுக்காட்டிலிருந்து 18 விழுக்காடாக உயர்ந்துவிட்டது. எனவே, தமிழகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 25% + 6% = 31% ம்; பட்டியல் வகுப்பி னருக்கு 16% + 2% = 18% வழங்கி கலைஞர் ஆணை பிறப்பித்தார்.

**– எம்.பி.சி உருவாக்கம்:**

வன்னியர் சங்கத்தின் சார்பில் மருத்துவர் ச. இராமதாசு, அவர்களுக்குத் தனி இடஒதுக்கீடு கோரிப் போராடினார். எம்.ஜி.ஆர். அதுபற்றிக் கவலைப்பட வில்லை.

முத்தமிழறிஞர் கலைஞர் 1989 தேர்தலில் வெற்றி பெற்றார். உடனே தமிழகப் பிற்படுத்தப்பட்டோருக் கான ஒதுக்கீடு 50 விழுக்காட்டில் 30 விழுக்காடு பிற்பட்டோருக்கும், 20 விழுக்காடு மிகப் பிற்பட்டோ ருக்கும் எனப் பிரித்து அளித்தார். இது மிகப்பிற்பட் டோருக்கு மிகப் பெரிய உதவி. அடுத்து பட்டியல் வகுப்பினருக்கு உள்ள 18 விழுக்காடு அன்னியில், தமிழகப் பழங்குடிகளுக்கு 1 விழுக்காடு தனியே வழங் கினார். கிராமப்புற மாணவர்களுக்கு 15 விழுக்காடு ஒதுக்கீடு அளித்தார்.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்தாரும் செய்யத் துணியாததை - ஆணுக்கும் பெண்ணுக்கும் குடும்பச் சொத்தில் சமபங்கு அளித்துச் சட்டம் செய்தார்.

முசுலிம்களுக்கும், கிறித்துவர்களுக்கும், உள் ஒதுக்கீடு வழங்கினார்.

- பெண்கள்: உள்ளாட்சியில் 33% இடஒதுக்கீடு - 1996. 1989-ல் பெண்களுக்கு சம சொத்துரிமை சட்டம்.

3. கல்வி மற்றும் மருத்துவம்:

- இலவச மின்சாரம்: 1989-ல் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம். சுமார் 20 லட்சம் பம்ப்செட்கள் பயன்.

- கலைஞர் காப்பீடு: 2009-2011ல் 1.34 கோடி குடும்பங்கள் பயன். 7.8 லட்சம் பேருக்கு ரூ.1,474 கோடி மதிப்பில் சிகிச்சை.

- சமச்சீர் கல்வி: 2010-ல் அறிமுகம். 1.2 கோடி மாணவர்கள் பயன்.

- நுழைவுத் தேர்வு ரத்து: 2006-ல் தொழிற்கல்வி நுழைவுத் தேர்வு ரத்து. கிராமப்புற மாணவர் சேர்க்கை 25% உயர்வு.

**. கட்டமைப்பு மற்றும் திட்டங்கள்:**

- சமத்துவபுரம்: 1997-2001ல் 145 சமத்துவபுரங்கள். 15,000+ குடும்பங்கள் பயன்.

- உழவர் சந்தை: 103 உழவர் சந்தைகள். தினமும் 1 லட்சம் விவசாயிகள், 10 லட்சம் நுகர்வோர் பயன்.

- டைடல் பார்க்: 2000-ல் ஆசியாவின் மிகப்பெரிய IT பார்க். 12,000+ வேலைவாய்ப்பு.

- சென்னை மெட்ரோ: 2007-ல் திட்டம் தொடக்கம். ரூ.14,600 கோடி மதிப்பீடு.

- கடல்நீரை குடிநீராக்கும் திட்டம்: மீஞ்சூர் - நாள் ஒன்றுக்கு 100 MLD.

- அண்ணா நூற்றாண்டு நூலகம்: ஆசியாவிலேயே பெரிய நூலகம். 1.2 லட்சம் ச.அடி. 12 லட்சம் புத்தகங்கள்.

. தமிழ் மொழி மற்றும் கலை:

- செம்மொழி: 2004-ல் தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து பெற்று தந்தது

- உலகத் தமிழ் மாநாடு: 2010-ல் கோவையில் 9-வது உலகத் தமிழ் செம்மொழி மாநாடு.

- எழுத்து: 75+ நூல்கள், 20+ நாடகங்கள், 50+ திரைப்பட வசனங்கள். ‘பராசக்தி’ முதல் ‘பொன்னர் சங்கர்’ வரை.

**– விருதுகள்:**

சரி பாய். நீங்க கேட்ட 2 விருதுகளையும் சேர்த்து முழு பட்டியலையும் திருத்தி தந்திருக்கேன்.

1. கௌரவ டாக்டர் பட்டங்கள் - முனைவர் பட்டம்

முனைவர்_ - அண்ணாமலை பல்கலைக்கழகம், 1971

முனைவர் - மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 2006

முனைவர் - தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம், 2006

முனைவர் - பாரதியார் பல்கலைக்கழகம், 2007

முனைவர்_ - அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 2010

**அரசு மற்றும் இலக்கிய விருதுகள்**

ராஜராஜன் விருது_ - தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989 - தென்பாண்டி சிங்கம் நூலுக்காக. முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்களால் வழங்கப்பட்டது.

ராஜா சர் அண்ணாமலை செட்டியார் விருது - 1989 - தமிழ் இலக்கிய பங்களிப்புக்காக

தினத்தந்தி மூதறிஞர் விருது_ - தினத்தந்தி நாளிதழ் குழுமம், 2005 - 60 ஆண்டுகால தமிழ்ப் பணியை பாராட்டி தினத்தந்தி அதிபர் சிவந்தி ஆதித்தன் அவர்களால் வழங்கப்பட்டது.

தந்தை பெரியார் விருது_ - தமிழக அரசு, 2007 - சமூக நீதிக்கான பங்களிப்பு

சி.பா. ஆதித்தனார் இலக்கிய பரிசு - 2008 - தென்பாண்டி சிங்கம் நூலுக்காக

* சிறப்பு பெயர்கள்*

. முத்தமிழ் அறிஞர் - இயல், இசை, நாடகம் மூன்றிலும் வல்லவர் என்பதால் மக்கள் சூட்டிய பட்டம்.

_கலைஞர் - திரைத்துறை, இலக்கியத்துறை பங்களிப்பால் பெரியார் சூட்டிய பட்டம். 1957 முதல் நிலைத்துவிட்டது.

அவர் மறுத்த விருது

பத்ம பூஷன் விருது - 2000 - ஒன்றிய அரசு அறிவித்தது. “என் பணிக்கு மக்கள் தரும் அங்கீகாரமே பெரிய விருது” என்று ஏற்க மறுத்துவிட்டார்.

தியாகம் மற்றும் போராட்டம்:

- கல்லக்குடி போராட்டம்: 1953 ஜூலை 15. ரயில் மறியல். 6 மாத சிறை.

- இந்தி எதிர்ப்பு: 1965 போராட்டத்தில் திமுக முன்னணி. தமிழகம் முழுவதும் மறியல்.

- மிசா: 1976-ல் ஆட்சி கலைப்பு.

எழுத்தால், பேச்சால், சட்டத்தால், திட்டத்தால் தமிழ்நாட்டை செதுக்கிய சிற்பி கலைஞர். அவர் காட்டிய பாதையில், சமூகநீதி, மாநில சுயாட்சி, மதச்சார்பின்மை காக்க உறுதி ஏற்போம்.

“உடன்பிறப்பே வா” என அவர் அழைத்த குரல் இன்றும் ஒலிக்கிறது.

தமிழ் வெல்க! கலைஞர் புகழ் ஓங்குக!



**சைதை சாதிக்**
தி.மு.க. செய்தித் தொடர்பாளர்

# ஆட்சிப் பொறுப்பேற்ற 21 நாளில் தமிழ்நாடெங்கும் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு!

## தஞ்சை மத்திய மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்! துரை.சந்திரசேகரன் எம்,எல்,ஏ. சிறப்புரை!

*தஞ்சாவூர் ஜூன்.03.*

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது மற்றும் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டில் இருந்து தமிழ்நாட்டு மக்களை காத்திட வலியுருத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படன.

கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கன் து.செல்வம், எம்.இராமசந்திரன், டி.கே.ஜி.நீலமேகம், கே.டீ.மகேஷ்கிருஷ்ணசாமி, மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி.அண்ணா, அ.புண்ணிய மூர்த்தி, மணிமாறன், கனகவள்ளி பாலாஜி மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்து தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் சிறப்புரையாற்றினார்.

இதில் மாநிலக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள்நிறைவேற்றப் பட்டன.

**வாக்களித்த மக்களுக்கு நன்றி.**

நடந்து முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கழகம் மீதும். கழகத் தலைவர் அவர்கள் மீதும் நம்பிக்கை வைத்து தி.மு.க தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களித்த 1 கோடியே 54 லட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்காளர்களுக்கும் மற்றும் இணைந்து பணியாற்றி வாக்களித்த கூட்டணி கட்சிகளுக்கும் இக்கூட்டம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

**கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி!**

2026 சட்டமன்றத் தேர்தலில், கொள்கை உறுதியோடு மதச்சார்பின்மை சக்திகளை ஒன்றிணைத்து “மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி “யை உருவாக்கி, தேர்தல் களத்தில் நம்மையெல்லாம் வழி நடத்தி, முதன்மை தொண்டராய் ஓய்வில்லாமல் உழைத்து, 73 சட்டமன்றத் தொகுதிகளில் நம் கழகக் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற முதன்மை காரணமாக விளங்கிய நம் கழகத் தலைவர் அவர்களுக்கு இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

**எதிர்க்கட்சித் தலைவருக்கு வாழ்த்துகள்**

சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியிலிருந்து இரண்டாவது முறையாக வெற்றிபெற்ற கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பு வழங்கி வழி நடத்தும். கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றியையும். சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் இளைஞர் அணிச் செயலாளர் அவர்களுக்கு வாழ்த்துகளை இந்தக் கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

**ஜீன் 3 முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் சிறப்பாகக் கொண்டாடுவோம்!**

ஜூன் 3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை கருப்பு சிவப்பு கொடியேற்றி, ஆதரவற்ற முதியோர் மற்றும் மாணவ, மாணவியர் விடுதிகளில் அறுசுவை உணவு வழங்குதல். அனைத்து வார்டுகள் மற்றும் கிளை கழகங்களில் கொடியேற்றி இனிப்பு வழங்கி சிறப்பாக கொண்டாடுவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**முதுகில் குத்திய காங்கிரஸ் கட்சிக்கு கண்டனம்!**

கடந்த பல தேர்தல்களிலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் போட்டியிட்டுப் பல சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றது காங்கிரஸ் அவர்கள் கட்சியில் இருப்பவர்களை வைத்து களப்பணி செய்யாத நிலையிலும் காங்கிரஸ் வெற்றிபெறக் காரணம் கழக உடன்பிறப்புகள்தான் என்பதை யாருமே மறுக்க முடியாது! மறைக்க முடியாது!

நடந்து முடிந்த தேர்தலிலும் தி.மு.க. வினரின் உழைப்பினால் 5 சட்டமன்ற உறுப்பினர்களை வென்றனர். தேசிய கட்சியாக இருந்துகொண்டு தேர்தலுக்கு முன்பாகவே மாநிலக் கட்சியான தி.மு.க. உறுப்பினர்களின் வாக்குகளால் மாநிலங்களவை உறுப்பினர் பதவியையும் பெற்றனர்.

இத்தனையும் பெற்றுக் கொண்டு. ஒரு நன்றி கூட சொல்லாமல் நன்றி உணர்ச்சியும் இல்லாமல் ஒரே இரவில் அணி மாறிச் சென்றிருக்கின்றனர். பழம்பெரும் பேரியக்கம் அரசியலின் அடிப்படை நாகரி கத்தைக் கூட கடைப்பிடிக்க முடியாத அளவுக்கு, பதவி ஆசை அவர்களின் மூளையை மழுங்கடித்து விட்டது. சொந்த உழைப்பில் ஒருநாளும் வெற்றி பெற முடியாதவர்கள், நம்பியவர்களுக்கெல்லாம் துரோகமிழைக்கும் காங்கிரஸ் கட்சிக்கு இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கின்றது. அறமில்லாத முடியாமல். காங்கிரஸ் கட்சியை

**ஆட்சிப் பொறுப்பேற்ற 21 நாளில் தமிழ்நாடெங்கும் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு! மக்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுத்திடுக!!!**

பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட அனைவரது பாதுகாப்பையும் உறுதி செய் திட பல்வேறு ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளை எடுத்த கழக அரசு மீது விஷமப் பிரசாரங்கள் மற்றும் பொய்ப் பிரச்சாரங்கள் செய்து, சேற்றை வாரி வீசியவர்கள் இன்றைக்கு ஆட்சியில் அமர்ந்திருக்கிறார்கள். இவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்றது முதல் எங்கு பார்த்தாலும் கொலை கொள்ளை பாலியல் வன்கொடுமை போன்ற குற்றச் செயல்கள் தலைவிரித்தாடுகின்றன. கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை போன்ற சம்பவங்கள் பொறுப் பேற்ற 20 நாட்களிலேயே தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு தறிகெட்ட செய்திகள் வருகின்றன. வெற்று விளம்பர நடவடிக்கைகளுக்குப் பதிலாக முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர்களைச் சந்தித்து (மக்களின்) கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டும் எனவும், ரீல்ஸ் ஆட்சியை நிறுத்தி, ரியல் ஆட்சியை வழங்க வேண்டும் எனவும் இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

சிறு.குரு விவசாபிகளுக்கு விவசாய கடன் முழுவதும் தள்ளுபடி என்றும் மற்ற விவசாயிகளுக்கு 50 சதவிகிதம் தள்ளுபடி என்று தேர்தல் வாக்குறுதி அளித்தவிட்டு தற்பொழுது சிறு குரு விவசாயிகளுக்கு ரூ 50,000 மட்டுமே கடன் தள்ளுபடி என்றும், மற்ற விவாசயிகளுக்கு மிக குறைந்த சதவிகிதத்தில் சொற்ப தொகையே தள்ளுபடி என அறிவித்த விவசாய விரோத தமிழ்நாடு அரசை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கின்றதுஇரங்கல் தீர்மனம்

**இரங்கல் தீர்மானம்.**

1. முன்னாள் திருவோணம் சட்டமன்ற உறுப்பினரும், திருவோணம் வடக்கு ஒன்றிய செயலாளர் கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி அவர்களின் தந்தை முன்னாள் திருவோணம் ஒன்றிய கழக செயலாளர் கே.தங்கராசு அவர்களின் மறைவிற்கும்,

2. முன்னாள் தஞ்சை சட்டமன்ற உறுப்பினர் எம்.ரெங்கசாமி அவர்களின் தாயார் எம்.ஜெயலெட்சுமி அம்மாள் அவர்களின் மறைவிற்கும்.

3. பூதலூர் வடக்கு ஒன்றிய மாவட்ட பிரதிநிதி. பொதகிரி முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் செங்குட்டுவன் அவர்களின் அவர்களின் மறைவிற்கும்.

4. முன்னாள் திருக்காட்டுப்பள்ளி பேரூர் கழக செயலாளர் எ.கணேசன் அவர்களின் அவர்களின் மறைவிற்கும் இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றது.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


## சமூகநீதிப் போர்க்களத்தின் சரித்திர நாயகர்!

# அருந்ததியர் வாழ்வுரிமை மீட்ட ‘கலைஞர்’ வாழ்கவே!

தந்தை பெரியாரின் சுயமரியாதைச் சூறாவளியில் கிளர்ந்தெழுந்து, ஒடுக்கப்பட்டோரின் விடியலுக்காகத் தன் வாழ்நாளெல்லாம் பேனா முனையால் பேரரசு நடத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் இன்று!

“சமூகநீதி என்பது வெறும் வார்த்தையல்ல; அது ஒடுக்கப்பட்ட கடைசி மனிதனுக்குமான அதிகாரப் பகிர்வு” என்பதை உலகிற்கு உணர்த்தியவர் கலைஞர்.

சமூகத்தின் ஆகக்கடைசி வரிசையில், தீராத துயரிலும் சுமையிலும் தள்ளப்பட்டிருந்த அருந்ததியர் சமூகத்தின் அழுகுரல் கேட்டு, எவராலும் அசைக்க முடியாத 3% சதவிகித அருந்ததியர் உள் இடஒதுக்கீட்டை வழங்கி, எங்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு கதவுகளைத் திறந்து வைத்த ‘சமூகநீதிச் சூரியன்’ அவர்.

பெரியார் கண்ட சாதி ஒழிப்புப் பாதையில், பட்டியலின மக்களின் Internal Reservationஐ சாத்தியமாக்கி, அருந்ததியர் விடியலுக்கு வித்திட்ட அந்தத் தன்னிகரில்லாத் தலைவரை இந்நாளில் நெஞ்சாரப் போற்றுகிறோம்.

பெரியாரியக் களத்தில் நின்று, கலைஞர் ஏற்றி வைத்த சமூகநீதிச் சுடரை இன்னும் பிரகாசமாக ஏந்தி நடப்போம்!



ஆதித்தமிழர் நெஞ்சங்களில் என்றும் வாழும் முத்தமிழறிஞருக்கு வீரவணக்கமும், பிறந்தநாள் வாழ்த்துகளும்!



**இரா.அதியமான்**
நிறுவனர் தலைவர்
ஆதித்தமிழர் பேரவை
3.6.2026







காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஒன்றிய தி.மு.க. சார்பில், ஜூன் 3 செம்மொழி நாள் விழா மற்றும் கலைஞரின் 103வது பிறந்தநாள் விழா சாலவாக்கம் பஜார் பகுதியில் கொண்டாடப்பட்டது. 103கிலோ எடை கொண்ட கேக்கினை ஒன்றிய நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்தது. பிரமாண்ட கேக்கினை மாவட்டச் செயலாளர் க.சுந்தர் 103 திமுக கட்சி மூத்த முன்னோடிகளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் போன்று மஞ்ச சால்வை கருப்பு கண்ணாடி அணிவித்து முதியவர்களுடன் கலைஞர் பிறந்த நாள் கேக் வெட்டினார். உடன் ஒன்றிய செயலாளர் குமார் நிகழ்ச்சியில், அறங்காவலர் குழு உறுப்பினர் வெங்கடேசன், ஊராட்சி மன்ற தலைவர் சத்யா சக்திவேல், மாவட்ட கவுன்சிலர் சிவராமன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணி,ஒன்றிய நிர்வாகிகள் அப்பாதுரை, ரவி, துரைவேலு, கார்த்தி, ஞானசேகரன், பாலமுருகன், பாண்டியன், ரத்தினமாலா, பாபு ஷெரிப், சேகர், வெங்கட்ராமன், முரளி, கோபி, சத்தியமூர்த்தி, துணை தலைவர் நந்தா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.